www.tamilarangam.net

# கெரில்லா யுத்தம் பற்றி லெனின்



தமிழீழ தேசிய
விடுதலை முன்னணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கெரில்லா யுத்தம் பற்றி லெனின்

தமிழீழ தேசிய விடுதலை முன்னணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியீடு எண் — 1

முதற் பதிப்பு — 1984 - டிசம்பர்

மொழியாக்கம் — நேத்திரா

# முன்னுரை

கெரில்லா யுத்தம் பற்றிய இக்கட்டுரை, லெனினுல் 1906ம் ஆண்டு போல்ஷ்விக் கட்சிக்குள் ஏற்பட்ட நெருக்கடியைத் தொடர்ந்து எழுதப்பட்டதாகும். 1905ம் ஆண்டு புரட்சியின் தோல்வியைத் தொடர்ந்து கட்சியின் பின்னடைவுக்கான காரணங்கள் பற்றியும் எவ்வகையான போராட்ட முறைகள் கைக்கொள்ளப்படல் வேண்டும் என்பது பற்றியும் பிரச்சினைகள் எழுந்த போது, அப் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்காக இக் கட்டுரையினை எழுதினுர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இன்றைய காலகட்டத்தின் தேவை கருதி இதனை மொழியாக்கம் செய்து தமிழில் பிரசுரிக்கின்ருேம். இக் கட்டுரையை பூரணமாக வாசித்துப் புரிந்து கொள்வதற்கு உதவியாக கெரில்லா யுத்தத்தின் தன்மை, அதன் பிரயோகங்கள் மற்றும் கெரில்லா யுத்தம் பற்றிய தவருன விளக்கங்கள் என்பவை பற்றிய சில விளக்கங்களை முன் வைக்கின்ருேம்.

கெரில்லா யுத்தம் எனும் கருதுகோள் இன்று பலராலும் தவருகப் பயன்படுத்தப்படுகின்றது. பல்வேறு அரசியல் பதங்களுக்கு என்ன நடந்ததோ அதுவே கெரில்லா யுத்தத்திற்கும் நடந்துள்ளது.

"யுத்தம் என்பது வர்க்கங்கள், தேசங்கள், நாடுகள் அரசியல் குழுக்கள் ஆகியவற்றுக்கிடையில் நிலவும் முரண்பாடுகள் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு வளர்ச்சியடைந்ததும் அவற்றைத் தீர்ப்பதற்குரிய அதி உயர்ந்த போராட்ட வடிவம். தனியுடமை முறையும் வர்க்கங்களும் தோன்றியது முதல் யுத்தம் இருந்து வருகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''அரசியலின் நீடிப்பே யுத்தம் என்பது. இந்த அர்த்தத்தில் யுத்தம் அரசியலாகவும், யுத்தம் தானே, அரசியல் நடவடிக்கையாகவும் விளங்குகின்றது. புராதன காலம் முதல் அரசியல் குணும்சம் இல்லாத யுத்தமே இருந்ததில்லை. ஆனுல் யுத்தத்திற்கு அதற்குரிய விசேஷ குணும்சங்கள் உண்டு. இந்த அர்த்தத்தில் பொதுவாக அரசியலுடன் சமப்படுத்த முடியாது. விசேஷ நடவடிக்கைகள் மூலம் அரசியலின் நீடிப்பே யுத்தம் என்பது. அரசியல் அதன் வழக்கமான வழிகளில் மேற்கொண்டு முன்னேற முடியாத ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு வளர்ச்சியடைந்ததும் அதன் பாதையில் உள்ள தடைகளை நீக்குவதற்காகவே யுத்தம் வெடிக்கின்றது. தடைகள் அகற்றப்பட்டு அரசியல் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டதும் யுத்தமும் முடிவடைகின்றது. ஆனுல் அத்தடைகள் முற்ருக நீக்கப்படாவிட்டால், அக் குறிக்கோள் பூரணமாக நிறைவேற்றப்படும் வரையில் யுத்தமும் தொடர்ந்து நடைபெறும்.'' எனவே அரசியலை இரத்தம் சிந்தாத யுத்தம் என்றும், யுத்தத்தை இரத்தம் சிந்தும் அரசியல் என்றும் கூறலாம் என்று தோழர் மாவோ யுத்தத்தைப் பற்றி விளக்கியுள்ளார்.

ஒவ்வொரு யுத்தமும் தனக்கேயுரிய விசேஷ குணவியல்புகளை கொண்டதாக இருக்கும் இக் குணவியல்புகள் காலம், அக்குறிப்பிட்ட காலகட்டத்தில் குறிப்பிட்ட இடத்தின் சமூக பொருளாதார நிலை, பூகோள நிலை போன்ற காரணிகளால் தீர்மானிக்கப்படும். யுத்தத்தில் இராணுவ யுத்த தந்திரம் இராணுவ நடைமுறைத் தந்திரம் என்பவை சரியான முறையில் வகுக்கப்பட்டாலே யுத்தத்தின் வெற்றி உறுதிப்படுத்தப்படும். தமிழீழப் பகுதியின் சமூக பொருளாதார, பூகோள நிலைமையை கணக்கிட்டுப் பார்க்கும் போது கெரில்லா நடவடிக்கையானது தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் தவிர்க்க முடியாத போராட்ட வடிவமாகும். கெரில்லா நடவடிக்கை தவிர்க்க முடியாத போராட்ட வடிவமெனும் போது மக்கள் யுத்தப் பாதையின் ஒரு பகுதியாக மட்டுமே உள்ளது. அது மட்டுமே முழுமையான மக்கள் யுத்தம் ஆகிவிடாது.



கெரில்லாப் போர்முறை என்பது இன்று நேற்று வந்ததல்ல. இது நீண்ட காலமாகவே இருந்து வருகின்றது. அடுத்து கெரில்லா தாக்குதல் என்ருல் என்ன என்பதனைப் பார்ப்போம். கெரில்லா யுத்தமானது கிரமமான யுத்தத்தை விட அளவிலும் வடிவிலும் மாத்திரமே வேறுபடுகின்றது. எண்ணிக்கையிலும் ஆயுத பலத்திலும் பலம் கூடிய எதிரியை எண்ணிக்கையிலும் ஆயுத பலத்திலும் பலம் குறைந்த படையைக் கொண்டு எதிர்பாராத தாக்குதல்களை நடத்தி எதிரிப்படைகளுக்கு அழிவினைக் கொடுப்பதாகும். கெரில்லா யுத்தத்தில் இரகசியமாகவும் துரிதமாகவும் செயல்படவும், விரோதியை எதிர்பாராத விதமாக தாக்கவும், விரைவில் வெற்றி தோல்வியை கொணர வேண்டும் என்பதும் செயற்படாத தற்காப்பையும் இழுத்தடித்துச் செல்வதையும் தாக்குதல்களுக்கு முன் சிதறலாகப படைகள் பரவுவதையும் கட்டாயமாகத் தவிர்க்க வேண்டும் என்பதும் முக்கியமான விடயங்களாகும். மேலும் கெரில்லா யுத்தத்தின் அடிப்படைக் கோட்பாடு தாக்குதலாகவே இருக்க வேண்டும். கெரில்லா யுத்தம் கிரமமான யுத்தத்தை விட அதிகம் தாக்குதல் ரீதியானது.

கெரில்லா யுத்தம் பற்றிய கோட்பாடு லெனினுல் முன் வைக்கப்பட்டாலும் இதனை மேலும் செழுமைப்படுத்தி நடைமுறை அனுபவங்களைத் தொகுத்து முன்வைத்தவர் தோழர் மாவோ ஆவார். கெரில்லாப் போர் முறைகள் சீனுவிலும் பின் வியட்நாமிலும் பரீட்சிக்கப்பட்டன. பின்னர் சேகுவேராவினுல் கியூபப் புரட்சியில் கைக்கொள்ளப்பட்டு, சில கோட்பாடுகள் சேகுவேராவினுலும் – ரெஜிஸ்டுப்ரேயினுலும் முன் வைக்கப்பட்டன இவை பற்றி ஆய்வு செய்வதற்கு முன் கெரில்லாப் போர் முறையின் வரலாறு பற்றிப் பார்ப்போம்.

மனித சமூகத்தில் என்று வர்க்கங்கள் தோன்றினவோ அன்றிலிருந்து போராட்டங்களும் ஆரம்பித்து விட்டன. ஒடுக்குமுறைக் கெதிராக மனிதன் போராட ஆரம்பித்தான். போராட்டம் நடந்த சூழ்நிலைகளுக்கேற்ப மனிதன் போராட்ட வடிவங்களை உருவாக்கிக் கொண்டான். ரோம சாம்ராஜ்யத்தில் அடிமைகளின் கிளர்ச்சிக்கு தலைமை கொடுத்த ஸ்பாட்டகஸ் (SPARTACUS) அடிமைகளின் கிளர்ச்சியில் கெரில்லாப் போரின் தன்மையுடைய போர் முறைகளை உபயோகித்திருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்னர் சீன விவசாயிகளின் கிளர்ச்சி, மற்றும் இந்திய முதலாவது தேசிய விடுதலைப் போர், இலங்கையில் 'புரன் அப்பு' போன்றோரின் வெள்ளையருக்கெதிரான போராட்டம் என்பவைகளில் கூட கெரில்லாத் தன்மையையுடைய போர் முறைகள் கையாளப்பட்டிருப்பதை நாம் காணலாம். இவ்வாறு பல சம்பவங்களைத் தொகுத்தே மார்க்சியம் கெரில்லா யுத்தம் பற்றி சில பொது விதிகளை முன்வைத்தது. இதனையே லெனின் பின்வருமாறு கூறுகின்றார். ''சோஷலிசத்தின் ஆரம்ப கால வடிவங்கள் எல்லாவற்றிலுமிருந்து மார்க்சியம் எவ்வகையில் வேறுபடுகின்றது என்றால். போராட்டம் ஏதாவது குறிப்பிட்ட வடிவத்தில்தான் இருக்க வேண்டும் என்று அது இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதில்லை. மிகவும் வேறுபட்ட பல போராட்ட வடிவங்களையும் அங்கீகரிக்கின்றது. இவ் வடிவங்களை அது இட்டுக் கட்டுவதில்லை. மாறாக இயக்கம் முன்செல்லும் பொழுது தாமாக புரட்சிகர வர்க்கங்களினால் எந்த எந்தப் போராட்ட வடிவங்கள் உருவாக்கப் படுகின்றனவோ அவற்றிற்கு ஒரு பொது விதி கண்டு அவற்றை நடத்திச் சென்று, போராட்டங்கள் உணர்வு பூர்வமானவையாக வெளிப்படும்படி செய்கின்றது.''

அடுத்து, தமிழீழப் போராளிகள் பலராலும் பல்விடயங்களுக்கு முன்னுதாரணமாக வைக்கப்படும் சேகுவேரா, ரெஜிஸ்டுப்ரே போன்றோரால் முன்வைக்கப்பட்ட அனுபவங்களையும் கோட்பாடுகளையும் சிறிது விரிவாகப் பார்ப்போம்.

கியூபாவில் இருந்த பாசிஸ்ட் பற்றிஸ்டாவின் ஆட்சியை முழுமையாக மக்கள் வெறுத்ததினாலும், இராணுவத்திற்குள்ளேயே பெரும் அதிருப்தி நிலவியதாலும், இச் சூழ்நிலையில் சேகுவேரா, பிடல் காஸ்ரோவின் தலைமையில் சிறிய படையைக் கொண்டு அரசின் மையத்தை நோக்கி கெரில்லாத் தாக்குதல் தொடுத்து, அரசை ஆட்டங் காணச் செய்து அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடியதாக இருந்தது. (இந் நடவடிக்கைகளில் இளைஞர்களும், குட்டிப் பூர்சுவாக்களும் பிரதான பங்காற்றினர்.) ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினாலும் பெரும்பான்மையான மக்களின் பூரணமான பங்களிப்புடனான ஒரு மக்கள் அரசைக் கட்ட முடியவில்லை. ஏனெனில் முன்பே-அதிகாரத்தைக் கைப்பற்ற முன்-மக்கள் அணி திரட்டப்படவில்லை. அவர்களின் உணர்வு மட்டம் வளர்க்கப்படாமையால் பூரணமான பங்களிப்பை புரட்சியின் பின்பு பெற முடியவில்லை. இதனால் நாம் இப் புரட்சியை முழுமையாக நிராகரிக்கின்றோம் என்று அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாது. இப் புரட்சி தனக்கேயுரித்தான விசேஷ குணும்சங்களையும் புதிய படிப்பினைகளையும் தந்த அதே சமயம் சில குறைபாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆரம்ப தவறுகளின் விளைவே இன்று கியூபா முழுக்க முழுக்க பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டதற்கான காரணம் மக்களை அமைப்பு ரீதியாக அணிதிரட்டி கூட்டு பொருளாதார நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் படாவிடின் சுய சார்புப் பொருளாதாரத்தை கட்டுவது சாத்தியமில்லை என்பதற்கு கியூபா ஒரு நல்ல உதாரணமாகும்.



இன்று கியூபா முழுமையாக சீனி ஏற்றுமதியிலேயே தங்கியுள்ளது. இதனால் கியூபாவின் சந்தை சோவியத் யூனியனால் கட்டுப்படுத்தப்படுகின்றது.

கியூபப் புரட்சியிலிருந்து நாம் சில அனுபவங்களைப் பெற முடியும். ஆனால் விசேஷ சூழலில் ஏற்பட்ட வெற்றியை பொதுமைப் படுத்துவதென்பது தவறானது சேகுவேரா இதே வடிவில் கியூபாவிற்குப் பின் இலத்தீன் அமெரிக்க நாடான பொலிவியாவில் போராட்டத்தை முன்னெடுக்க முயற்சித்து தோல்வியைத் தழுவிக் கொண்டார். இலத்தீன் அமெரிக்க நாடுகளில் குட்டிப் பூர்சுவாக்களும், இளைஞர்களும் சேகுவேராவின் தத்துவத்தால் பெரிதும் கவரப்பட்டார்கள்.

நிக்கரகுவா, எல்சல்வடோர் போன்ற நாடுகளில் மக்கள் போராட்டமாக முன்னெடுக்கப் படுவதாலேயே அவை முன் சென்றன. அங்கும் கூட சரியான பாட்டாளி வர்க்கத் தலைமை உருவாக்கப் பட்டதாக சொல்ல முடியாது. அந்த நாடுகள் சரியான திசை வழியில் செல்லுமா அல்லது கியூபா போல் ஆகுமா என்பதை அவர்களின் எதிர்கால நடவடிக்கைகளில் இருந்தே தீர்மானிக்க முடியும்.

சேகுவேராவின் அனுபவங்கள் இராணுவ ரீதியில் விடுதலைப் போராளிகளுக்கு உதவக் கூடியவை. ஆனால் அவற்றில் பல பொது விதியாக கொள்ள முடியாதவை. பொலிவியாவில் சேகுவேராவின் நண்பனாய் இருந்து கைது செய்யப்பட்டு சிறையில் இருந்து பின் பிரான்சிய அரசின் வேண்டுகோளுக்கு இணங்க விடுதலை செய்யப்பட்ட ரெயிஸ்டுப்ரே தனது கெரில்லா யுத்தம் பற்றிய கோட்பாட்டில் குவியத் தேற்றம் (FOCO THEORY) என்பதனை முன்வைத்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று அவரே அதனைக் கைவிட்டு பிரான்சிய அரசின் அரசியல் ஆலோசகராகப் போயுள்ளார். அடுத்து அவர் முன் வைத்த குவியத் தேற்றம் பற்றிப் பார்ப்போம்.

''ஒடுக்குமுறை காரணமாக முதலில் விழிப்படைந்த குழுவினர் ஒடுக்குமுறையை எதிர்த்து தாக்குதல்களில் ஈடுபடும் போது ஒடுக்குமுறை மேலும் அப்பகுதிகளில் குவியப்படுத்தப்படும். இதன் மூலம் புரட்சிக்கான சூழல் உருவாகும். இது போன்ற பல குவியங்களை ஏற்படுத்தி ஒடுக்குமுறை உச்சக்கட்டத்தை அடையும் போது மக்கள் தன்னெழுச்சியாகப் போராடுவார்கள்'' என்பதே. இங்கு புறச்சூழல் மாற்றமடைவதால் மட்டும் போராட்டம் வந்துவிடாது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அகநிலையான சக்திகளை சரியாக வளர்ப்பதே நாம் செய்ய வேண்டிய வேலையாகும். புறச்சூழலின் வளர்ச்சிக்கு ஏற்ப அகநிலை சக்திகள் குறிப்பிட்ட கட்டத்திற்கு ஏற்ப வளர்ச்சி பெற்றவுடன் தான் மாற்றம் ஏற்படுகின்றது. இந்த அடிப்படையிலேயே தமிழீழப் போராட்டத்தை நாம் பார்க்க வேண்டும். மக்கள் ஸ்தாபனமயப்படுத்தப்பட்டு சரியான பாட்டாளி வர்க்கத் தலைமையில் வழி நடத்தப்பட்டு உண்மையான மக்கள் போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலமே எமது போராட்டத்தை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியும். இன்று இன்னொரு புறமாக நிரந்தரப் படையைக் கட்டி கிரமமான யுத்தத்தை நடத்தும் போக்கு காணப்படுகின்றது. இது இன்னொரு புறம் மக்கள் படையைக் கட்டாது வெறும் கூலிப்படை மனோபாங்குடையைக் கட்டும் நடைமுறைக்கு இட்டுச் செல்லும். நாம் மக்கள் போராட்டத்தில் கெரில்லாப் போரின் பங்கை உணர்ந்து அதனை சரிவரப் பிரயோகிப்பதன் மூலமே வெற்றியை உறுதி செய்ய முடியும்.

**தமிழீழ தேசிய விடுதலை முன்னணி**

N. L. F. T.



# 'கெரில்லா யுத்தம்' பற்றி லெனின்

கெரில்லா நடவடிக்கை பற்றிய பிரச்சினையில் நமது கட்சிக்கும் தொழிலாளரில் பெருந்திரளானவருக்கும் மிகவும் அக்கறை உண்டு. இப் பிரச்சினையைத் தொட்டு பல தடவை எழுதியுள்ளோம். ஏற்கனவே வாக்களித்தபடி எமது அபிப்பிராயங்கள் எல்லாம் அடங்கிய ஒரு முழுமையான அறிக்கையை இப்பொழுது முன்வைக்க உத்தேசித்துள்ளோம்.

முதலிலிருந்தே தொடங்குவோமாக. போராட்ட வடிவங்கள் பற்றிய பிரச்சினையை ஆராயுங் காலத்து ஒவ்வொரு மார்க்சிஸ்ட்டும் என்ன அடிப்படையான முன் நிபந்தனைகளை வைக்க வேண்டும். முதலாவதாக, சோஷலிசத்தின் ஆரம்ப கால வடிவங்கள் எல்லாவற்றிலுமிருந்து மார்க்சிஸம் எவ்வகையில் வேறுபடுகின்றது என்றால் போராட்டம் ஏதாவது ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் தான் இருக்க வேண்டும் என்று அது இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதில்லை; மிகவும் வேறுபட்ட பல போராட்ட வடிவங்களையும் அங்கீகரிக்கின்றது; இவ் வடிவங்களை அது இட்டுக் கட்டுவதில்லை. மாறாக இயக்கம் முன்செல்லும் பொழுது தாமாக புரட்சிகர வர்க்கங்களினால் எந்த எந்த போராட்ட வடிவங்கள் உருவாக்கப்படுகின்றனவோ அவற்றிற்கு ஒரு பொது விதி கண்டு, அவற்றை நடத்திச் சென்று, போராட்டங்கள் உணர்வுபூர்வமானவையாக வெளிப்படும்படி செய்கின்றது. வெறும் கருத்தியற் பாங்கான சூத்திரங்களையும் வறட்டுத் தத்துவத்தில் பிறக்கும் யோசனைகளையும் மார்க்சிஸம் எதிர்க்கின்றது. மக்கள் திரள் ஈடுபடும் போராட்டம் நடக்கும் பொழுது அதைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவனத்துடன் நோக்க வேண்டும் என்று மார்க்சிஸம் கோருகின்றது. இயக்கம் வளர வளர, மக்கள் திரளின் வர்க்க உணர்வு விருத்தி அடைய அடைய, போராட்டத்தில் பல்வேறு தாக்குதல் மற்றும் தற்காப்பு நடைமுறைகள் பிறக்கின்றன. எனவே மார்க்சிஸம் எந்த ஒரு போராட்ட வடிவத்தையும் ஒரே அடியாக ஒதுக்குவதில்லை. எக்காரணங்கொண்டும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் சாத்தியமானதும் கையாளப்படுவதுமான குறிப்பிட்ட போராட்ட வடிவங்களோடு மார்க்சிஸம் நிறுத்திக் கொள்வதில்லை. ஏனெனில் அக்காலத்துப் போராட்ட வீரர்கள் அறியாத புதிய வடிவங்கள் சமூகச் சூழ்நிலையில் ஏற்படும் மாறுதலுக்கேற்ப தோன்றுவது தவிர்க்க முடியாது என்பதை மார்க்சிஸம் உணர்கின்றது. இவ்விஷயத்தில் மக்கள் திரளின் நடைமுறையிலிருந்து மார்க்சிஸம் கற்றுக் கொள்கிறது என்று நாம் சொல்லலாம். போராட்டங்களில் பங்கேற்காது தனிமையான தங்கள் இடங்களிலிருந்து ஆய்வுகளை மேற்கொண்டு ''முறை காண் போர்கள்'' கண்டு பிடிக்கும் போராட்ட வடிவங்களை மக்களுக்குப் போதிக்கப் போவதாக மார்க்சிஸம் எவ்விதத்திலும் உரிமை கொண்டாடுவதில்லை. எடுத்துக்காட்டாக வரப்போகும் நெருக்கடி நம்மால் இப்பொழுது நினைத்துப் பார்க்கவும் முடியாத புதிய போராட்ட வடிவங்களைத் தோற்றுவிக்கும் என்பதை நாம் அறிவோம் என்று சமூகப் புரட்சியின் வடிவங்களை ஆராய்ந்த கௌட்ஸ்கி[1] கூறியுள்ளார்.

இரண்டாவதாக போராட்ட வடிவங்கள் பற்றிய பிரச்சினையை முழுக்க முழுக்க வரலாற்று ரீதியான ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்று மார்க்சிஸம் கோருகின்றது. கண்கூடான (ஸ்தூலமான) வரலாற்றுச் சூழ்நிலையிலிருந்து தனிமைப்படுத்தி பிரச்சினையை ஆராயப் புகுவது இயங்கியல் பொருள் முதல் வாதத்தின் அரிச்சுவடியைக் கூட புரிந்து கொள்ளவில்லை என்பதை வெளிக்காட்டும். பொருளாதார வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களில் அரசியல் மற்றும் தேசியப் பண்பாட்டுச் சூழ்நிலை, வாழ்க்கைச் சூழ்நிலை முதலி



யவற்றிலுள்ள வேறுபாடுகளைப் பொறுத்து, வெவ்வேறு போராட்ட வடிவங்கள் தலையெடுத்துப் பிரதான போராட்ட வடிவமாகத் திகழும்; இது விஷயத்தில் பிரதான போராட்ட வடிவத்தைச் சார்ந்துள்ள ஏனைய துணை வடிவங்களும் மாறுதலடையும். ஓர் இயக்கத்தின் வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் நிலவும் உண்மையான நிலைமையை விரிவாக ஆராயாமல் ஒரு குறிப்பிட்ட போராட்ட வடிவத்தைக் கையாளலாமா என்கிற கேள்விக்கு சரி அல்லது கூடாது என்று பதில் கூற முயல்வது மார்க்சிய நிலையை முற்றிலும் கைவிட்டதாகும்.

மேற்கூறிய இரண்டு பிரதான கோட்பாடுகளை நம் வழிகாட்டிகளாகக் கருத வேண்டும். மேற்கு ஐரோப்பாவில் மார்க்சிஸத்தின் வரலாற்று அனுபவம் மேற்கூறியவற்றை உறுதிப்படுத்தும் எண்ணற்ற உதாரணங்களை அளித்திருக்கின்றது. தற்காலத்தில் ஐரோப்பிய சமூக ஜனநாயக வாதம்[2] நாடாளுமன்றங்களில் பங்கெடுத்துக் கொள்வதையும் தொழிற் சங்க இயக்கத்தையும் பிரதான போராட்ட வடிவங்களாகக் கருதுகின்றது. கடந்த காலத்தில் ஆயுதப் புரட்சியை அங்கீகரித்தது. வருங்காலத்தில் நிலைமைகள் மாறினால் ஆயுதப் புரட்சி மேற்கொள்வதற்குத் தயாராக இருக்கிறது. ருசியக் காடெட்டுகள்[3] பெட்சாகிளாவட்சிகள்[4] போன்ற பூர்ஷ்வா தாராளவாதிகளின் கருத்துக்களை இவ்விஷயத்தில் லட்சியம் செய்யாது, 1870களில் அரசியல் சாராத முறையாக ஒரே அடியில் பூர்ஷ்வா வர்க்கத்தை வீழ்த்துவதற்கு பொது வேலை நிறுத்தம் தான் சமூக சர்வ நிவாரணி என்ற கருத்தை நிராகரித்த சமூக ஜனநாயக வாதம் (ருசியாவில் 1905ம் ஆண்டில் ஏற்பட்ட அனுபவத்திற்குப் பிறகு) பொது அரசியல் வேலைநிறுத்தத்தை குறிப்பிட்ட ஒரு நிலைமையில் இன்றியமையாத போராட்ட முறைகளில் ஒன்றாக இன்று ஏற்றுக் கொள்கின்றது. 1840களில் தெருவில் பெருந்தடைகள் அமைத்துப் போராடுவதை போராட்ட முறையாகக் கருதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யது. ஆனால் 19ம் நூற்றாண்டு இறுதியில் தீர்மானமான காரணங்களுக்காக இம்முறையை நிராகரித்தது என்ற போதிலும் மாஸ்கோ நகரத்தில் தெருமறிப்புப்போர் முறை உகந்தது என்பதை ஏற்று நூற்றாண்டின் இறுதியில் மேற்கொண்ட கருத்தை மாற்றிக் கொள்ள முற்றிலும் தயாராக இருந்தது.

## II

மார்க்சிஸ அடிப்படையிலான பொதுக் கருத்துரைகளைத் தெளிவு படுத்திய பின், ருசியப் புரட்சியை ஆயப் புகுவோமாக. இப் புரட்சி தோற்றுவித்த போராட்ட வடிவங்களின் வரலாற்று ரீதியான வளர்ச்சியை நினைவு கூருவோமாக. முதன் முதலாக, 1896 - 1900 காலகட்டத்தில் தொழிலாளர்களின் பொருளாதார வேலைநிறுத்தங்கள் நடந்தன; பின்பு 1901 - 1902ல் தொழிலாளர்களும் மாணவர்களும் நடத்திய அரசியல் ஆர்ப்பாட்டங்களும், 1902ல் விவசாயிகளின் கிளர்ச்சிகளும் வெடித்தன. பின்னர் (1902ல் ரோஸ்டா, 1905ல் கோடைக்கால வேலைநிறுத்தங்கள், 1905 ஜனவரி 9 ஆகிய) அரசியற் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்ட வெகுஜன வேலைநிறுத்தங்கள் நிகழ்ந்தன. 1905ம் ஆண்டில் நடந்த அகில ருசிய அரசியல் வேலைநிறுத்தத்தின் பொழுது ஆங்காங்கே தெருமறிப்புப் போர்கள் அக்டோபரில் நடந்தன; டிசம்பர் 1905[5] ஆயுதந்தாங்கிய எழுச்சியுடன் மிகப் பரந்த அளவில் தெருமறிப்புப் போர்களும் நடந்தன. ஏப்ரல் 1906 முதல் ஜுன் 1906 வரை அமைதியான நாடாளுமன்றத் தேர்தல் போராட்டம் நடந்தது. ஜுன் 1905 முதல் ஜுலை 1906ல் சில பகுதிகளில் மட்டும் இராணுவக் கலகங்களும், 1905 இலையுதிர் காலத்தில் தொடங்கி 1906 இலையுதிர் காலம் வரை சில பகுதிகளில் விவசாயிகளின் கிளர்ச்சிகளும் நடைபெற்றன.



பொதுவாக போராட்ட வடிவங்கள் பற்றிய நிலைமை 1906 இலையுதிர் காலத்தில் இவ்வாறு இருந்தது. இப் போராட்டங்களுக்கு 'எதிரடியாக' எதேச்சதிகார அரசும் போராட்டம் நடத்தியது. இந்த எதிரடிப் போராட்டம் எடுத்த வடிவம் 1903 வசந்த காலத்தில் கிஷினேவில் தொடங்கி 1906 இலையுதிர் காலத்தில் செட்லெட்ஸில் முடிவடைந்த ''கறுப்பு நூறுகள்''[6] தாக்குதல்களாகும். யூதர்களையும், மாணவர்களையும், புரட்சிவாதிகளையும் வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களையும் அடித்து நொருக்குவதும், கறுப்பு நூறுகளின் தாக்குதல்களைத் திட்டமிட்டு நடத்துவதும் மேலும் மேலும் சிறப்பாகச் சீராக்கப்பட்டன. கறுப்பு நூறுகளின் வன்முறையுடன் கூலிக்கு அமர்த்தப்பட்ட குண்டர்களின் வன்முறையும் சேர்ந்தது. கிராமங்களிலும் நகரங்களிலும் துப்பாக்கிப் படைத் தாக்குதல்கள் நடந்தன. தண்டக் காவற் படைத் தாக்குதல்களும் இவற்றுடன் ஒன்று சேர்ந்தன.

நடப்பின் பிரதான பின்னணி இது தான். இந்தப் பின்னணியிலே இக் கட்டுரை ஆய்விற்கும் மதிப்பீட்டிற்கும் உட்படுத்தும் நிகழ்ச்சிகள் காட்சியளிக்கின்றன. இவை அரைகுறையானவை, பிரதான நிகழ்ச்சிகளின் கிளை நிகழ்ச்சிகள் துணை போகின்றவை என்பதில் கேள்விக்கு இடமில்லை. இந் நிகழ்ச்சிகள் யாவை? அவற்றின் வடிவங்கள் என்ன? அவற்றின் காரணங்கள் என்ன? அவை எப்பொழுது தோன்றின? எவ்வளவு தூரம் பரவியுள்ளன? புரட்சியின் பொதுவான வளர்ச்சிக்கு அவற்றின் பங்கென்ன? சமூக ஜனநாயகவாதம் ஒழுங்கமைத்து நடத்தி வரும் தொழிலாள வர்க்கப் போராட்டத்திற்கும் அவற்றிற்கும் என்ன தொடர்பு? நிலைமையின் பொதுப் பின்னணியை கோடிட்டுக் காட்டிய பின் நாம் ஆராயப் புகவேண்டிய பிரச்சினைகள் இவையே.

நமக்கு அக்கறையுள்ள நிகழ்ச்சி ஆயுதப் போராட்டம். இது தனி நபர்களாலும் சிறு குழுக்களாலும் நடத்தப்படுகின்றது. இவர்களில் சிலர் புரட்சிகர ஸ்தாபனங்களைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சேர்ந்தவர்கள், (ருசியாவில் சில பகுதிகளில் பெரும்பாலானவர்களாக இருக்கும்) மற்றவர்கள் எந்த புரட்சிகர ஸ்தாபனத்தையும் சேராதவர்கள். ஆயுதப் போராட்டம் இரண்டு வேறுபட்ட நோக்கங்களுடன் நடத்தப்பட்டு வருகின்றது. இவ்விரண்டையும் கண்டிப்பாக நுணுக்கமாகப் பிரித்துக் காண வேண்டும். முதலாவதாக இப் போராட்டம் தனி நபர்களை, இராணுவத்தையும் பொலிஸையும் சேர்ந்த தலைமை அதிகாரிகள் மற்றும் கீழ்நிலை ஊழியர்களை கொலை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இரண்டாவதாக, அரசுக் கருவூலங்கள் அலுவலகங்களிலிருந்தும், பணம் படைத்த தனிநபர்களிடமிருந்தும், பணம் பறிமுதல் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பறிமுதல் செய்யப்படும் பணத்தில் ஒரு பகுதி கட்சி நிதியை அடைகின்றது; ஒரு பகுதி மக்களை ஆயுதந்தாங்கிய எழுச்சிக்காக ஆயுதங்கள் வாங்கி அளிக்கவும், ஆயத்தம் செய்யவும் செலவிடப்படுகின்றது; இன்னும் ஒரு பகுதி ஆயுதப் போராட்டத்தை நடத்துபவர்களின் வாழ்க்கைச் செலவிற்கு செல்கின்றது. பெரியஅளவில் பறிமுதல் செய்யப்பட்ட பணம் புரட்சிகர கட்சிகளுக்கே அளிக்கப்பட்டது. சிறு அளவில் பறிக்கப்பட்ட பணம் பெரும்பாலும் — ஏன் முற்றிலும் கூட எனலாம் — ஆயுதப் போராட்டம் நடத்துபவர்களின் — 'பணம் பறித்தவர்களின்' — அன்றாடச் செலவிற்கே பயன்பட்டது. 1905 டிசம்பர் எழுச்சிக்குப் பின்னர் இத்தகைய போராட்டம் சந்தேகமின்றி மிகப் பரவலாகவும் தீவிரமாகவும் வளர்ந்தது. ஆயுதப் போராட்டம் நடத்தும் அளவிற்கு அரசியல் நெருக்கடி தீவிரமடைந்ததும், நகரங்கள், கிராமங்கள் எங்கும் பட்டினி, வறுமை, வேலையின்மை ஆகிய கொடுமைகள் பொறுக்கவொண்ணா அளவிற்குத் தீவிரமடைந்ததும் நாம் மேலே கூறிய போராட்டத்திற்கான ஒரு முக்கிய காரணம். ஊர் சுற்றிகள், லும்பன்கள்,[7] அராஜகவாதக் குழுக்கள் ஆகியோருக்கு மற்ற போராட்ட முறைகளை விட இப் போராட்ட முறையே மிகவும் பிடித்திருந்தது; ஏன் இந்த ஒரு சமூகப் போராட்ட முறையைத் தான் மற்ற முறைகளை எல்லாம்



ஒதுக்கித் தள்ளிவிட்டு கடைப்பிடித்தனர். இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதும், புதிதாக துருப்புகளைத் திரட்டியதும், கறுப்பு நூறுகளின் தாக்குதல்களும், இராணுவ நீதிமன்றங்களும் எதேச்சதிகாரம் கையாண்ட பதிலடிப் போராட்ட நடவடிக்கைகள் எனக் கருத வேண்டும்.

# III

**சா**தாரணமாக இப் போராட்டத்தைப் பற்றிய மதிப்பீடுகள் இது அராஜகவாதம்,[8] பிளாங்கியம்,[9] பழைய பயங்கர வாதம், மக்களிடமிருந்து, தனிமைப்பட்டுப் போன தனிநபர்களின் செயல்கள் என்றும் இது தொழிலாளர்களிடம் மனச்சோர்வு ஏற்படுத்துகிறது; மக்களின் பெரும் பகுதியினரின் வெறுப்புக்கு உள்ளாகிறது; இயக்கம் சீர்குலைவடையக் காரணமாகிறது; புரட்சியை பாதிக்கிறது என்றும் கூறுகின்றன. அன்றாடச் செய்தித் தாள்களில் சம்பவங்கள் பற்றி வெளிவருவனவற்றில் இத்தகைய மதிப்பீட்டிற்கு ஆதரவாக பல உதாரணங்கள் எளிதில் கிடைக்கும்

ஆனால் இத்தகைய உதாரணங்கள் திருப்தி அளிக்கின்றனவா? இதைச் சோதனை செய்ய, இவ்வகைப் போராட்ட முறை மிகவும் தீவிரமாக வளர்ச்சி அடைந்துள்ள 'லெட்டிஷ்'[10] பிரதேசத்தை எடுத்துக் கொள்வோம். லெட்டிஷ் சமூக ஜனநாயக வாதிகள் பற்றி 'நவய்வ்ரெம்யா'[11] ஏடு தன் செப்டெம்பர் 9, செப்டெம்பர் 12 இதழ்களில் குறை கூறி புகார் செய்திருக்கின்றது. ருசிய சமூக ஜனநாயகத் தொழிற் கட்சியின் ஒரு பிரிவான லெட்டிஷ் சமூக ஜனநாயகத் தொழிற் கட்சியின் ஏடு 30,000 பிரதிகள் அச்சிடப்பட்டு ஒழுங்காக வெளிவருகின்றது. அவ்வேட்டின் 'அறிவிப்புகள்' பத்திகளில் உளவாளிகளின் பட்டியல் பிரசுரிக்கப்படுகின்றது. இவ்வுளவாளிகளைத் தீர்த்துக் கட்ட வேண்டிய கடமை ஒவ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வொரு கண்ணியமான நபருக்கும் உண்டு. போலீசுக்கு உதவி செய்யும் ஆட்கள் ''புரட்சியின் எதிரிகள்'' என்றும், அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என்றும் அவர்களுடைய சொத்து பறிமுதல் செய்யப்படலாம் என்றும் அறிவிப்பு வெளியிடப்படுகின்றது. சமூக ஜனநாயகக் கட்சிக்கு பணம் தருவோர் கையெழுத்திட்ட அஞ்சல் தலை ஒட்டிய ரசீதுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பொது மக்களுக்குத் தெரியப்படுத்தி அறிவிப்பு பிரசுரிக்கப்படுகின்றது. கட்சியின் கடைசி அறிக்கையில் கட்சியின் மொத்த வருமானம் சென்ற ஆண்டில் 48,000 ரூபிள்கள் என்றும் அதில் ஆயுதங்கள் வாங்குவதற்காக பறிமுதல் நடவடிக்கை மூலம் லிபேர்க் கிளைக்குக் கிடைத்ததிலிருந்து 5,600 ரூபிள்கள் அளிக்கப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது. நவயவ்ரெம்யாவிற்குக் கோபம் வருவது இயல்பு தான். இந்த ''புரட்சிகரச் சட்டத்தின்'' மீதும், ''பயங்கர அரசாங்கத்'' தின் மீதும் அவ்வேடு நெருப்பைக் கக்கியிருக்கின்றது.

லெட்டிஷ் சமூக ஜனநாயகவாதிகளின் இந்த நடவடிக்கைகளை அராஜகவாதம் என்றோ, பிளாங்கீயம் என்றோ, பயங்கரவாதம் என்றோ அழைக்கும் தைரியம் யாருக்கும் இராது. ஏன்? ஏனெனில் இப் புதிய போராட்ட முறைக்கும் டிசம்பரில் வெடித்ததும் மறுபடியும் வெடிக்க இருப்பதுமான எழுச்சிக்குமிடையே தெளிவான தொடர்பு இருக்கின்றது. ருசியா முழுவதையும் எடுத்துக் கொண்டால், இந்தத் தொடர்பு அவ்வளவு தெளிவாகத் தெரியவில்லை என்றாலும் தொடர்பு இருப்பது உண்மையே. டிசம்பருக்குப் பின்னர் தான் 'கெரில்லா' போர் பரவலாக விரிவடைந்தது என்பதும் இதற்கும் பொருளாதார நெருக்கடி மட்டுமல்லாமல் அரசியல் நெருக்கடியும் தீவிரமடைந்ததற்கும் தொடர்பு இருக்கிறது என்பது விவாதத்திற்கு அப்பாற்பட்டது. பழைய ருசிய பயங்கரவாதம்[12] அறிவுஜீவிகளைச் சேர்ந்த ரகசியச் சூழ்ச்சிகாரனின் செயல். ஆனால் இன்று பொதுவாக கெரில்லாப் போரை நடத்துவது தொழிலாளப் போராளி



அல்லது வெறும் வேலையில்லாத தொழிலாளி. எல்லாவற்றையும் ஒரே வார்ப்பாகப் பார்க்கும் இயல்புடையவர்களுக்கு பிளாங்கீயம், அராஜகவாதம் என்ற அடைமொழிகள் தான் எளிதாக மனதில் தோன்றும். ஆனால் லெட்டிஷ் பிரதேசத்தில் மிக வெளிப்படையாக தென்படும் எழுச்சிக்கான சூழ்நிலையைக் கருத்திற் கொண்டால், இந்த அலுத்துப் போன அடைமொழிகள் பொருத்தமில்லை என்பது தெற்றென விளங்கும்.

எழுச்சியின் சூழ்நிலைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் கெரில்லாப் போர் முறையை ஆராயும் முறை நம்மிடம் மிகச் சாதாரணமாகக் காணப்படுகின்றது. இது எவ்வளவு தவறானது, அறிவியலுக்கு ஒவ்வாதது, வரலாற்று அடிப்படைக்குப் பொருந்தாதது என்பதை லெட்டுகளின் உதாரணம் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இந்த விசேஷ சூழ்நிலைகளை மனதிலிருத்திக் கொள்ள வேண்டும்; மாபெரும் ஆயுத எழுச்சிகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தின் தனிச் சிறப்பு வாய்ந்த அம்சங்களைச் சிந்திக்க வேண்டும். இத்தகைய சூழ்நிலைகளில் எவ்வகைப் போராட்ட முறைகள் தவிர்க்க முடியாதபடி கையாளப்பட வேண்டியுள்ளது என்பதை உணர வேண்டும். அவ்வாறு செய்யாமல், காடட்டுகளும், நவயவ்ரெம்யாக் காரர்களும் ஒரே மூச்சாகப் பயன்படுத்தும் 'அராஜக வாதம்'; கொள்ளை; போக்கிரித் தனம்; என்றெல்லாம் மனப்பாடம் செய்து வைத்த வார்த்தைகளை அள்ளிக் கொட்டி பிரச்சினையை எதிர்கொள்ளாமல் நழுவ முயல்வது கூடாது.

கெரில்லா நடவடிக்கைகள் நம் வேலையைச் சீர்குலைய வைக்கின்றன என்று கூறப்படுகின்றது. இந்த வாதத்தை கொண்டு 1905 டிசம்பருக்குப் பின்னர் அதாவது கறுப்பு நூறுகளின் தாக்குதல்களும் இராணுவச் சட்டமும் நடைமுறையிலிருக்கும் காலகட்டத்தில் நிலவும் நிலைமையை ஆராய்வோம். இந்தக் காலகட்டத்தில் நம் இயக்கத்தை அதிகமாகச் சீர்குலைய வைப்பது எது? எதிர்ப்பு இல்லா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மையமா? திட்டமிட்டுச் செயற்படும் கெரில்லாப் போரா?
ருசியாவின் மையப் பகுதிகளை அதன் மேற்கு எல்லைப் பிர
தேசங்களோடும், போலந்தோடும், லெட்டிஷ் பிரதேசத்தோ
டும் ஒப்பிடுங்கள். மேற்கு எல்லைப் பகுதிகளில் தான் கெரில்
லாப் போர் மிகப் பரவலாகவும் மிகத் தீவிரமாகவும் வளர்ந்
துள்ளது என்பது பற்றி கேள்விக்கிடமில்லை. அதே அளவு
கேள்விக்கு இடமில்லாமலிருப்பது மேற்கு எல்லைப் பகுதிகளை
விட ருசியாவின் மையப் பகுதிகளில் பொதுவாகப்
புரட்சி இயக்கமும் குறிப்பாக சமூக ஜனநாயக இயக்கமும்
அதிக அளவு சீர்குலைந்துள்ளது என்பதேயாம். உண்மை,
இதைக் கொண்டு கெரில்லாப் போரினால் தான் போலந்து
மற்றும் லெட்டிஷ் பிரதேச சமூக ஜனநாயக இயக்கங்களின்
சீர்குலைவு வெகுவாக இல்லை என்ற முடிவுக்கு நாம் வர
மாட்டோம். 1906ல் ருசியாவில் சமூக ஜனநாயக வாதத்
தொழிற் சங்க இயக்கத்தின் சீர்குலைவிற்கு கெரில்லாப்
போரைப் பழி கூற முடியாது என்கிற ஒரே முடிவு தான்
நாம் வரக்கூடிய முடிவு.

இது விஷயத்தில், தேசிய நிலைமைகளின் தனித் தன்
மைகள் பற்றி அடிக்கடி மறைமுகமாகச் சுட்டிக் காட்டப்படு
கின்றது. தற்பொழுது முன்வைக்கப்படும் வாதத்தின் பல
வீனத்தையே இந்த மறைமுகச் சுட்டு வெகு தெளிவாக
வெளிப்படுத்துகின்றது. தேசிய சூழ்நிலை விஷயமென்றால்,
அது அராஜகம், பிளாங்கீயம் அல்லது பயங்கரவாதம் பற்
றிய விஷயமல்ல. ஏனெனில் இந்தப் பாவங்கள் ருசியா
முழுவதற்கும் பொது. குறிப்பாக ருசியர்களுக்கே உரித்தா
னது எனலாம். எனவே இவை அல்லாத வேறு விஷயமா
கத் தான் இருக்க வேண்டும். அந்த வேறு விஷயத்தை
ஸ்தூலமாக ஆய்வு செய்யுங்கள் சீமான்களே! அப்பொழுது
தெரியவரும் உங்களுக்கு; தேசிய ஒடுக்குமுறை அல்லது
பகைமை எதையும் விளக்காது. ஏனெனில் இவை மேற்கு
எல்லைப் பிரதேசங்களில் காலாகாலமாக எப்பொழுதுமே
இருந்து வந்திருக்கின்றன. ஆனால் கெரில்லாப் போர்



முறை தற்பொழுதைய வரலாற்றுக் காலகட்டத்தில் தான் தோன்றியுள்ளது. தேசிய ஒடுக்குமுறையும் பகைமையும் நிலவும் பிரதேசங்கள் பல இருக்கின்றன. ஆனால் அங்கு கெரில்லாப் போர் நடக்கவில்லை. மாறாக தேசிய ஒடுக்குமுறை இல்லாத இடங்களில் சில தடவை கெரில்லாப் போர் வெடித்துள்ளது பிரச்சினையை ஸ்தூலமாக ஆய்வு செய்தால் தெரிய வருவது கெரில்லாப் போர் என்பது தேசிய ஒடுக்குமுறையுடன் சம்பந்தப்பட்ட விஷயமல்ல. மாறாக அது ஆயுதப் புரட்சி நிலவும் சூழ்நிலையுடன் சம்பந்தப்பட்ட விஷயம். வெகுஜன இயக்கம் ஓர் எழுச்சியாக வெடிக்கும் நிலையை அடையும் பொழுதும் ஓர் உள்நாட்டுப் போரில் பெரிய சண்டை ஒன்று நடந்து முடிந்து அடுத்த பெரிய சண்டை மூள்வதற்கும் இடையே நீண்ட கால இடைவெளி நேரும் பொழுதும் கெரில்லாப் போர் ஒரு தவிர்க்க முடியாத போராட்ட முறையாகத் தோன்றுகிறது.

இயக்கத்தைச் சீர்குலைப்பது கெரில்லா நடவடிக்கை அல்ல. மாறாக தன்னால் - தன்னுடைய கட்டுப்பாட்டில் எடுக்கக் கூடிய நடவடிக்கைகளை கட்சி எடுக்க முடியாத அளவிற்கு பலவீனம் அடைவதே இயக்கச் சீர்குலைவிற்குக் காரணம். அதனால் தான் ருசியர்களாகிய நாம் கெரில்லாப் போருக்கு விரோதமாக பழிச் சொற்களை அள்ளி வீசிக் கொண்டிருக்கும் அதே சமயத்தில் கட்சியை உண்மையாகவே சீர்குலைவு படுத்தும் இரகசியமான முறைப்படுத்தப்படாத ஒழுங்கற்ற பட்டும் படாததுமான கெரில்லா நடவடிக்கைகளில் ஈடுபடுகிறோம். இப் போராட்டம் பிறப்பதற்குக் காரணமான வரலாற்றுச் சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ள இயலாததால் அதனுடைய தீமை பயக்கும் அம்சங்களை மட்டுப்படுத்தி நீக்கவும் இயலாதவர்களாகி விட்டோம். இருந்தும் போராட்டம் நடந்து கொண்டே இருக்கின்றது. அது மிகச் சக்தி வாய்த்த பொருளாதார மற்றும் அரசியற் காரணங்களால் தோற்றுவிக்கப்பட்டது. அக் காரணங்களை நீக்கும் சக்தியோ அப் போராட்டத்தை நீக்கும் சக்தியோ நம் கையில் இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மையா? திட்டமிட்டுச் செயற்படும் கெரில்லாப் போரா? ருசியாவின் மையப் பகுதிகளை அதன் மேற்கு எல்லைப் பிர தேசங்களோடும், போலந்தோடும், லெட்டிஷ் பிரதேசத்தோ டும் ஒப்பிடுங்கள். மேற்கு எல்லைப் பகுதிகளில் தான் கெரில் லாப் போர் மிகப் பரவலாகவும் மிகத் தீவிரமாகவும் வளர்ந் துள்ளது என்பது பற்றி கேள்விக்கிடமில்லை. அதே அளவு கேள்விக்கு இடமில்லாமலிருப்பது மேற்கு எல்லைப் பகுதிகளை விட ருசியாவின் மையப் பகுதிகளில் பொதுவாகப் புரட்சி இயக்கமும் குறிப்பாக சமூக ஜனநாயக இயக்கமும் அதிக அளவு சீர்குலைந்துள்ளது என்பதேயாம். உண்மை, இதைக் கொண்டு கெரில்லாப் போரினால் தான் போலந்து மற்றும் லெட்டிஷ் பிரதேச சமூக ஜனநாயக இயக்கங்களின் சீர்குலைவு வெகுவாக இல்லை என்ற முடிவுக்கு நாம் வர மாட்டோம். 1906ல் ருசியாவில் சமூக ஜனநாயக வாதத் தொழிற் சங்க இயக்கத்தின் சீர்குலைவிற்கு கெரில்லாப் போரைப் பழி கூற முடியாது என்கிற ஒரே முடிவு தான் நாம் வரக்கூடிய முடிவு.

இது விஷயத்தில், தேசிய நிலைமைகளின் தனித் தன் மைகள் பற்றி அடிக்கடி மறைமுகமாகச் சுட்டிக் காட்டப்படு கின்றது. தற்பொழுது முன்வைக்கப்படும் வாதத்தின் பல வீனத்தையே இந்த மறைமுகச் சுட்டு வெகு தெளிவாக வெளிப்படுத்துகின்றது. தேசிய சூழ்நிலை விஷயமென்றால், அது அராஜகம், பிளாங்கீயம் அல்லது பயங்கரவாதம் பற் றிய விஷயமல்ல. ஏனெனில் இந்தப் பாவங்கள் ருசியா முழுவதற்கும் பொது. குறிப்பாக ருசியர்களுக்கே உரித்தா னது எனலாம். எனவே இவை அல்லாத வேறு விஷயமா கத் தான் இருக்க வேண்டும். அந்த வேறு விஷயத்தை ஸ்தூலமாக ஆய்வு செய்யுங்கள் சீமான்களே! அப்பொழுது தெரியவரும் உங்களுக்கு; தேசிய ஒடுக்குமுறை அல்லது பகைமை எதையும் விளக்காது. ஏனெனில் இவை மேற்கு எல்லைப் பிரதேசங்களில் காலாகாலமாக எப்பொழுதுமே இருந்து வந்திருக்கின்றன. ஆனால் கெரில்லாப் போர்



முறை தற்பொழுதைய வரலாற்றுக் காலகட்டத்தில் தான் தோன்றியுள்ளது. தேசிய ஒடுக்குமுறையும் பகைமையும் நிலவும் பிரதேசங்கள் பல இருக்கின்றன. ஆனால் அங்கு கெரில்லாப் போர் நடக்கவில்லை. மாறாக தேசிய ஒடுக்கு முறை இல்லாத இடங்களில் சில தடவை கெரில்லாப் போர் வெடித்துள்ளது பிரச்சினையை ஸ்தூலமாக ஆய்வு செய்தால் தெரிய வருவது கெரில்லாப் போர் என்பது தேசிய ஒடுக்குமுறையுடன் சம்பந்தப்பட்ட விஷயமல்ல. மாறாக அது ஆயுதப் புரட்சி நிலவும் சூழ்நிலையுடன் சம்பந்தப்பட்ட விஷ யம். வெகுஜன இயக்கம் ஓர் எழுச்சியாக வெடிக்கும் நிலையை அடையும் பொழுதும் ஓர் உள்நாட்டுப் போரில் பெரிய சண்டை ஒன்று நடந்து முடிந்து அடுத்த பெரிய சண்டை மூள்வதற்கும் இடையே நீண்ட கால இடைவெளி நேரும் பொழுதும் கெரில்லாப் போர் ஒரு தவிர்க்கமுடியாத போராட்ட முறையாகத் தோன்றுகிறது.

இயக்கத்தைச் சீர்குலைப்பது கெரில்லா நடவடிக்கை அல்ல. மாறாக தன்னால் - தன்னுடைய கட்டுப்பாட்டில் எடுக் கக் கூடிய நடவடிக்கைகளை கட்சி எடுக்க முடியாத அளவிற்கு பலவீனம் அடைவதே இயக்கச் சீர்குலைவிற்குக் காரணம். அதனால் தான் ருசியர்களாகிய நாம் கெரில்லாப் போருக்கு விரோதமாக பழிச் சொற்களை அள்ளி வீசிக் கொண்டிருக்கும் அதே சமயத்தில் கட்சியை உண்மையாகவே சீர்குலைவு படுத்தும் இரகசியமான முறைப்படுத்தப்படாத ஒழுங்கற்ற பட்டும் படாததுமான கெரில்லா நடவடிக்கைகளில் ஈடுபடு கிறோம். இப் போராட்டம் பிறப்பதற்குக் காரணமான வர லாற்றுச் சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ள இயலாததால் அதனுடைய தீமை பயக்கும் அம்சங்களை மட்டுப்படுத்தி நீக் கவும் இயலாதவர்களாகி விட்டோம். இருந்தும் போராட் டம் நடந்து கொண்டே இருக்கின்றது. அது மிகச் சக்தி வாய்த்த பொருளாதார மற்றும் அரசியற் காரணங்களால் தோற்றுவிக்கப்பட்டது. அக் காரணங்களை நீக்கும் சக்தியோ அப் போராட்டத்தை நீக்கும் சக்தியோ நம் கையில் இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கெரில்லாப் போர் முறைக்கு எதிராக நாம் செய்யும் புகார்
கள் எழுச்சி விஷயத்தில் கட்சியின் பலவீனம் பற்றிய
புகார்களேயாகும்.

அமைப்புச் சீர்குலைவிற்குக் கூறியது மனத்திடக் குலை
விற்கும் பொருந்தும். மனத்திடத்தைக் குலைப்பது கெரில்
லாப் போர் அல்ல. மாறாக ஒழுங்கு முறையில்லாத, ஸ்தா
பன அமைப்புக் கட்டுப்பாடற்ற, கட்சி சாராத கெரில்லாச்
செயல்களே மனத்திடத்தைக் குலைப்பவை. கெரில்லா நட
வடிக்கைகளைக் கண்டிப்பதாலும் சபிப்பதாலும் இந்தக் கேள்
விக்கே இடமில்லாத மனத்திடக் குலைவை ஒரு இம்மி கூட
குறைக்க முடியாது. ஏனெனில் கண்டனங்களும் சாபங்க
ளும் ஆழமான பொருளாதார மற்றும் அரசியற் காரணங்
களால் உருவான ஒரு நிகழ்ச்சிப் போக்கைத் தடுக்க முடியவே
முடியாது. அசாதாரணமான மனத்திடக் குலைவை ஏற்படுத்
தும் நிகழ்ச்சிப் போக்கைத் தடுக்க முடியாது என்றால்,
இத்தகைய அசாதாரணமான மனத்திடக்குலைவை ஏற்படுத்
தக் கூடிய போர் முறைகளை கட்சி கையாள்வதறகுக் கார
ணமில்லை என்று ஆட்சேபனை எழுப்பலாம். அத்தகைய ஆட்
சேபனை வெறும் பூர்ஷ்வா தாராளவாத ஆட்சேபனையே தவிர
மார்க்சிய ஆட்சேபனை அல்ல. ஏனெனில் ஒரு மார்க்சிய
வாதியால் உள்நாட்டுப் போரையோ அதன் ஒரு வடிவமான
கெரில்லாப் போர் முறையையோ 'அசாதாரணமானது',
மனத்திடக் குலைவு ஏற்படுத்தக் கூடியது என்று பொதுப்
படையாகக் கருத முடியாது. ஒரு மார்க்சியவாதி வர்க்கப்
போராட்டத்தையே தன் அடிப்படையாகக் கொள்வானே
தவிர, சமூக அமைதியை அல்ல. மிகத் தீவிரமான பொரு
ளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் தோன்றும் சில
குறிப்பிட்ட காலகட்டங்களில், வர்க்கப் போராட்டம் நேரடி
யான உள்நாட்டுப் போராக மக்களின் இரு பிரிவினரிடையே
ஆயுதப் போராட்டமாக முதிர்ந்துவிடும். அத்தகைய காலங்
களில், உள்நாட்டுப் போரை ஆதரிக்கும் நிலையை எடுக்
கும் கட்டாயத்திற்கு மார்க்சியவாதி உள்ளாகிறான். அந்



நிலையை அவன் எடுத்துத்தான் ஆக வேண்டும். உள்நாட்
டுப் போரை ஒழுக்க அடிப்படையில் கண்டனம் செய்வதை
மார்க்சியத்தின் நிலையிலிருந்து அனுமதிக்கப்பட முடியவே
முடியாது.

உள்நாட்டுப் போர்க் காலத்தில் பாட்டாளி வர்க்கத்தின்
இலட்சியக் கட்சி போராடும் கட்சியே. இதை மறுக்க முடி
யவே முடியாது. ஒரு குறிப்பிட்ட சமயத்தில் குறிப்பிட்ட
உள்நாட்டுப் போர் முறையானது உள்நாட்டுப் போரின்
நலன் அடிப்படையில் உகந்ததல்ல என்று வாதிட்டு நிரூ
பிக்க முடியும் என்பதை ஒப்புக் கொள்ளத் தயாராக உள்
ளோம். இராணுவ வெற்றிக்கு உகந்ததா இல்லையா என்
கிற அடிப்படையில் உள்நாட்டுப் போரின் பல்வேறு போர்
முறைகளைப் பற்றிய விமர்சனத்தை ஏற்றுக் கொள்கின்றோம்.
மேலும் இக் கேள்விக்கு இறுதி முடிவு எடுக்க வேண்டியவர்
கள் குறிப்பிட்ட வட்டாரத்தில் நடைமுறைச் செயற்பாடு
கொண்டிருக்கும் சமூக ஜனநாயகக் கட்சி ஊழியர்களே
என்பதையும் முழுக்க முழுக்க ஆமோதிக்கிறோம். மார்க்சியக்
கொள்கைகளின் பெயரில் நாங்கள் தீர்மானமாக கோருவ
தெல்லாம் உள்நாட்டுப் போரின் நிலைமை பற்றிய ஆய்வை
மேற்கொள்ள வேண்டும் என்பதும், அராஜகவாதம்,
பிளாங்கீயம், பயங்கரவாதம் என்பவை பற்றிய அலுத்துப்
போன, சலித்துப் போன பேச்சின் மூலம் இந்த ஆய்வை
மேற்கொள்வதிலிருந்து நழுவப் பார்க்கக் கூடாது என்பது
மேயாகும். ஏதோ ஒரு சமயத்தில் போலந்து சோஷலிசக்
கட்சியின் ஏதோ ஒரு கிளை ஸ்தாபனம் முட்டாள்தனமான
கெரில்லா நடவடிக்கை மேற்கொண்டதைக் காரணம் காட்டி
பயமுறுத்தி கெரில்லாப் போரில் பொதுவாக சமூக ஜனநா
யகக் கட்சி பங்கெடுப்பது பற்றிய விஷயத்தில் விவாதத்
தைத் திசை திருப்புவதும் கூடாது என்றும் நாங்கள் கோரு
கின்றோம்.

கெரில்லாப் போர் இயக்கத்தை ஸ்தாபனச் சீர்குலை
வுக்கு உள்ளாக்குகின்றது என்ற வாதத்தை ஆழமாக விமர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிக்க வேண்டும். ஒரு புதிய போராட்ட முறைக்கு முன்பே ஒரு ஸ்தாபனம் ஆயத்தமாக இல்லாத காரணத்தால் அந்தப் புதிய போராட்ட முறையைக் கையாளும் பொழுது அந்த ஸ்தாபனம் ஸ்தாபனச் சீர்குலைவுக்கு உள்ளாவது தவிர்க்க முடியாததே. ஏனெனில் புதிய போராட்ட முறைகளின் கூடவே புதிய அபாயங்கள் தோன்றுகின்றன; புதிய தியாகங்கள் புரியும் நிர்ப்பந்தமும் நேர்கின்றது. நாம் கிளர்ச்சி முறைகளை மேற்கொண்ட பொழுது நமது பழைய பிரச்சார வட்டத்தினரின் ஸ்தாபன அமைப்பு சீர்குலைந்தது; ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தொடங்கிய பொழுது நம் குழுக்களின் வேலை சீர்குலைந்தது. ஒரு போரில் ஒவ்வொரு ராணுவ நடவடிக்கையும் ஓரளவிற்கு போராளிகள் மத்தியில் சீர்குலைவு ஏற்படுத்துகின்றது. இதற்கு போராடவே கூடாது என்று பொருள் கொள்ளலாமா? கூடாது, போராடக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று தான் பொருள் கொள்ள வேண்டும். அவ்வளவு தான்.

சில சமூக ஜனநாயகவாதிகள் கர்வத்துடன் தளுக்கிக் கொண்டு, ''நாங்கள் ஒன்றும் அராஜகவாதிகளோ, திருடர்களோ, கொள்ளைக்காரர்களோ அல்ல; இதற்கெல்லாம் மேலானவர்கள்; கெரில்லாப் போர் முறையை நிராகரிக்கின்றோம்'' என்று மார் தட்டிக் கொள்கிறார்கள். இவர்களைப் பார்க்கும் பொழுது, நான் என்னையே கேட்டுக் கொள்கின்றேன். தாங்கள் சொல்வது என்ன? அதன் பொருள் என்ன? என்று இவர்கள் உணர்கிறார்களா? நாடெங்கிலும் மக்களுக்கும் கறுப்பு நூறுகளின் மற்றும் அரசுப் படைகளுக்குமிடையே ஆயுதந் தாங்கிய மோதல்களும் சண்டைகளும் நடந்து வருகின்றன. புரட்சியின் வளர்ச்சியில் தற்பொழுதைய கட்டத்தில் இவை முற்றிலும் தவிர்க்க முடியாத நிகழ்ச்சிப் போக்கு. மக்களும் தாங்களாகவே ஸ்தாபனக் கட்டுக்கோப்பு எதுவுமில்லாமல், அதன் விளைவாக வருந்தத்தக்க விரும்பத்தகாத முறைகளில் ஆயுதந்தாங்கிய தாக்குதல்கள் நடத்தி பதிலடி கொடுத்து வருகிறார்கள். நமது கட்சி ஸ்தாபனம் (பலவீன



மாகவும், ஆயத்தமாக இல்லாமலும் இருப்பதால்) ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் தானாக வெடிக்கும் இப் போராட்டத்திற்கு கட்சி தலைமை வகிக்காமல் விலகி நிற்பதை என்னால் புரிந்து கொள்ள முடியும். ஸ்தலத்திலே நடைமுறைப் பணி புரியும் ஊழியர்கள் தான் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதையும் பலவீனமான, ஆயத்தமற்ற ஸ்தாபனங்களை புதிய பணிகளுக்குத் தகுதி பெறும்படி உருவாக்குவது எளிதல்ல என்பதையும் நான் உணர்கின்றேன். ஆனால் இத்தகைய ஆயத்தமின்மைக்காக வருத்தம் தெரிவிக்காமல், கர்வத்துடன் தானே எல்லாம் தெரிந்த மேதாவி என்பது போல் தன்னையே உயர்ந்த இடத்தில் ஏற்றி வைத்துக் கொண்டு, இளம் வயதில் அராஜகவாதம், பிளாங்கீயம், பயங்கரவாதம் ஆகியவற்றைப் பற்றி மனப்பாடம் செய்துவைத்த வாசகங்களை கிளிப்பிள்ளை போல் திருப்பிச் சொல்லும் சமூக ஜனநாயகவாத தத்துவவாதியையோ பிரச்சாரகனையோ பார்க்கும் பொழுது உலகிலேயே மிகப் புரட்சிகரமான தத்துவம் இப்படிச் சீரழிந்து விட்டதே என்று துன்பப்படுகின்றேன்.

கெரில்லாப் போர்முறையின் ஒரு விளைவு வர்க்க உணர்வுமிக்க பாட்டாளி வர்க்கத்தினரை மிகவும் இழிந்த குடிகூத்தில் மூழ்கிக் கிடக்கின்ற கழிசடைகளுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளும்படி செய்கிறது என்று கூறப்படுகின்றது. இது உண்மையே. ஆனால் இதற்கு என்ன பொருள்? இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன? பாட்டாளி வர்க்கத்தின் கட்சி கெரில்லாப் போர் முறையை தனது ஒரே போராட்ட முறையாகவோ ஏன் தன் போராட்ட முறையாகவோ கருதவே கூடாது!. அடுத்து, மற்ற போராட்ட முறைகளுக்குத் துணை போகும் ஒன்றாகவே கெரில்லாப் போர் முறை இருக்க வேண்டும்; மேலும் பிரதான போர் முறைகளுக்குத் தகுந்த அளவிலே தான் கெரில்லாப் போர் முறை இடம்பெற வேண்டும்; அது சோஷலிசத்தின் தாக்கத்திற்கு உள்ளாகி, சோஷலிசத்தின் உயர் பண்புகளாகிய அறிவொளியையும் கட்டுப்பாட்டையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெற்று மேன்மையடைய வேண்டும். இந்தக் கடைசி முன் நிபந்தனை கைவிடப்பட்டால், பூர்ஷ்வா சமுதாயத்திலுள்ள எல்லா—நிச்சயமாக எல்லா—போராட்ட முறைகளும் பாட்டாளி வர்க்கத்தைப் பல்வேறு பாட்டாளி வர்க்கமல்லாத மக்கட் பிரிவினருடன் நெருக்கமான தொடர்பு கொள்ளும் படி செய்யும்; இம் மக்கட் பிரிவினரில் பூர்ஷ்வாவிற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடைப்பட்ட வர்க்கத்தினரும் இருப்பார்கள்; பாட்டாளி வர்க்கத்திற்கும் கீழ்நிலையிலுள்ள லும்பன்களும் இருப்பார்கள்; சம்பவங்களின் இயல்பான போக்கிற்கு விட்டுவிட்டோமானால், பாட்டாளி வர்க்கம் சோஷலிச ஒளி பெருததால், சின்னாபின்னமாகும்; இழிந்து போகும்; மிகமோசமான இழிவான காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும். வேலை நிறுத்தங்கள், சம்பவங்கள் நடக்கிற போக்கில் போகும்படி விட்டால் 'இணக்க உறவு'களாக சீரழிந்து, நுகர்வோர்களுக்கு எதிராக தொழிலாளர்களும் எசமானர்களும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும் இழிநிலையில் முடியும். நாடாளுமன்றம் ஒரு விபச்சார விடுதியாக இழிந்து போகும்; பூர்ஷ்வா அரசியல்வாதிக் கும்பல் மொத்தமாகவும் சில்லறையாகவும் ''தேச சுதந்திரம்'', ''தாராளவாதம்'', ''ஜனநாயகம்'', ''குடியரசு'', ''சமய குரு எதிர்ப்பு'', ''சோஷலிசம்'' மற்றும் கிராக்கி இருக்கும் இதர சரக்குகளையும் வியாபாரம் செய்யும். பத்திரிகை ஒரு டாப்பர் மாமாவாக, விலைமாதுவின் தரகனாக இழிந்து, மக்களை இழிநிலைக்குக் கடத்திச் சென்று, கும்பல்களின் கீழ்த்தரமான உணர்ச்சிகளுக்கு உடந்தையாகப் பணியாற்றும்.

பாட்டாளி வர்க்கத்தை அதற்குச் சற்றே மேல்மட்டத்திலும் சற்றே கீழ் மட்டத்திலும் உள்ள மக்கட் பிரிவினரிடமிருந்து ஒரு சீனச் சுவர் கட்டிப் பிரித்துப் பாதுகாக்கும் தன்மையுள்ள உலகளாவிய போராட்ட முறைகள் எதுவும் சமூக ஜனநாயகக் கட்சியிடம் இல்லை. வெவ்வேறு காலகட்டங்களில் சமூக ஜனநாயகவாதம் வெவ்வேறு முறைகளைக் கையாள்கிறது. ஆனல் ஒரு நிபந்தனையை எப்பொழுதும் கருத்திற் கொள்கிறது. அது தான் மிகக் கடுமையாக வரை



யறுக்கப்பட்ட சித்தாந்த மற்றும் ஸ்தாபன சம்பந்தமான
முன் நிபந்தனைகளை தேர்ந்து எடுக்கப்படும் போராட்ட முறை
திருப்தி செய்ய வேண்டும் என்பதே.*

# IV

ஐரோப்பாவில் நடந்த பூர்ஷ்வா புரட்சிகளுடன் ஒப்
பிடும் பொழுது ருசியப் புரட்சியில் அளவிட முடியாத அளவு
பல்வேறுபட்ட தன்மையுடைய போராட்ட வடிவங்களைக்
காணலாம். 1902ல் இதை கௌட்ஸ்கி ஓரளவு எதிர்பார்த்
துக் கூறினார்; ஒரு வேளை ருசியா நீங்கலாக, மற்ற நாடு
களில் இனி வரப் போகும் புரட்சி, மக்களின் இரு பிரிவின
ருக்கிடையே நடக்கும் போராட்டமாக இருக்குமே அல்லா
மல் அரசுக்கு எதிராக மக்கள் நடத்தும் போராட்டமாக
இருக்காது. ருசியாவில் மக்கட் பிரிவினரிடையே நடக்கும்
போராட்டம் மேற்கத்திய பூர்ஷ்வாப் புரட்சிகளில் நடந்ததை
விட அதிக அளவிலும் பரவலாகவும் வளர்ச்சி அடைந்துள்
ளது என்பதில் ஐயமில்லை. மக்களிடையே வெகு சிலரே
புரட்சிக்கு எதிரிகளாக இருக்கின்றனர். ஆனல் போராட்
டம் தீவிரம் அடைய அடைய அந்த வெகு சிலர் தங்களை
மேலும் மேலும் நன்ருக ஸ்தாபன ரீதியாக ஒன்றுதிரட்டி
அணி அமைத்துக் கொள்கின்றனர். பூர்ஷ்வா வர்க்கத்தின்
மிகப் பிற்போக்கான பிரிவினரிடமிருந்து ஆதரவு பெறுகின்
றனர். இத்தகைய காலகட்டத்தில், நாடு முழுவதும் அர
சியல் வேலைநிறுத்தங்கள் நடைபெறும் இக் காலகட்டத்தில்
எழுச்சி என்பது, முன் போல் ஒரு வெகு சிறு பகுதியில் வெகு
குறுகிய காலத்திற்குள் அடங்கிய தனிநபர் செயல்கள் வடி
வத்தில் இருக்க முடியாது என்பது முழுக்க முழுக்க இயல்
பானது; தவிர்க்க முடியாதது. அது (எழுச்சி) நாடு முழு
வதையும் தழுவிய மிகவும் சிக்கல் வாய்ந்த உயர்ந்த வடி
வமாகிய நீண்ட கால உள்நாட்டுப் போராக, மக்களின் இரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யின் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டால் அனுமதிக்கலாம். மிகவும் கொடுமை புரியும் அரசு அதிகாரிகளுக்கு எதிராகவும் கறுப்பு நூறுகளில் மிகத் தீவிரமாக செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிராகவும் பயங்கரவாதச் செயல்களை சில முன் நிபந்தனைகட்கு உட்பட்டு பரிந்துரை செய்யலாம்:

1. ஸ்தல மக்களின் உணர்ச்சிகளை மதிக்க வேண்டும்.
2. ஸ்தலத்திலுள்ள தொழிலாளி வர்க்க இயக்கத்தின் நிலையைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.
3. பாட்டாளி வர்க்கப் படைகள் இதனால் வீணே சிதறி அழியக் கூடாது.

இம் முன்வரைவிற்கும் ஒற்றுமை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கும் இடையே உள்ள நடைமுறை வேற்றுமை அரசுச் சொத்துப் பறிமுதல் அனுமதிக்கப்படவில்லை என்ற ஒரே அம்சத்தில் தான்.

## குறிப்புகள்

1. கௌட்ஸ்கி: (1854-1938) ஜெர்மன் நாட்டைச்சேர்ந்த வரலாற்றாசிரியரும், பொருளாதார நிபுணரும் ஆவார். 19ம் நூற்றாண்டின் இறுதியாண்டுகளில் ஜெர்மனிய சமூக-ஜனநாயகவாதத்தின் தத்துவாசிரியராக விளங்கினார். அக் காலத்தில் மார்க்சியக் கருத்துக்கள் பரவ இவருடைய நூல்கள் மிகவும் உதவின. எனினும் பாட்டாளி வர்க்க ஆட்சியை நிறுவுவது பற்றியும் பூர்ஷ்வா அரசு இயந்திரத்தைத் தகர்ப்பது பற்றியும் மௌனம் சாதித்தார். பின்னர் இரண்டாம் அகிலத்தின் தலைவராக் விளங்கிய இவர் புரட்சிகர மார்க்சியத்திற்கு எதிரான நிலையை மேற்கொள்ளலானார். லெனினால் ஓடுகாலி என்று அழைக்கப்பட்டார்.



2. சமூக ஜனநாயகவாதம்: 19ம் நூற்றாண்டு இறுதியில் ஐரோப்பாவில் சோஷலிசக் கருத்துக்களைப் பரப்பும் இயக்கங்கள் இப் பெயரைத் தாங்கியிருந்தன. புரட்சிகர மார்க்சியம் உட்பட பலதரப்பட்ட சோஷலிசச் சித்தாந்தங்களும் இடம் பெற்றிருந்த இவ் வியக்கங்கள் பின்னர் பிளவுண்டன. இன்று சீர்திருத்தவாதத்திற்கு அடைமொழியாக விளங்குகிறது.
3. காடட்டுகள்: ருசியாவில் 1905ம் ஆண்டு அக்டோபரில் நிறுவப்பட்ட இக் கட்சி பூர்ஷ்வாக்களின் நலன்களைப் பிரதிபலித்தது. ருசியாவில் அரசியற் சட்டத்திற்கு உட்பட்ட முடியாட்சியை அமைத்து நிலப்பிரபுக்களுடனும் ஜார் அரசனுடனும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்பிய பூர்ஷ்வாச் சக்திகளின் கட்சியாகிய இது புரட்சிக்கு எதிரான நிலையை மேற்கொண்டது. காடட் (Cadet) என்பது அரசியற் சட்ட ஜனநாயகக் கட்சி (Constitutional Democratic Party) என்பதன் சுருக்கம்.
4. பெட்ஸாக்ளாவ்ஸ்திஸி (Bezzaglautsi): [அநாமதேயங்கள்] ஓரளவு காடட்டுகளின் நிலையையும் ஓரளவு மென்ஷ்விக்குகளின் நிலையையும் எடுத்துக் கொண்ட பூர்ஷ்வா அறிவுஜீவிகளின் குழு 1905 புரட்சி நலிவடையும் சமயத்தில் உருவாகியது. 'அநாமதேயம்' என்ற பொருளுடைய இச் சொல் அப் பெயரில் நடத்திய பத்திரிகையைக் குறிக்கின்றது. பூர்ஷ்வா தாராளவாதத்தை ஆதரித்த இக் குழுவினர் சமூக ஜனநாயக வாதத்தில் சீர்திருத்தப் போக்குகளை ஆதரித்தனர்.
5. 1905 டிசம்பர் புரட்சி: 1905ம் ஆண்டு ஜப்பானிடம் ருசியா தோற்றதின் விளைவாகவும் புரட்சிகர நிலைமை உருவாகியிருந்ததனாலும் புரட்சி வெடித்தது. ஜார் அரசனிடம் மனு அளிக்கச் சென்ற மாபெரும் தொழிலாளர் ஊர்வலத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதே புரட்சி வெடிக்க உடனடியான காரணமாக விளங்கியது. நாடெங்கும் ஆர்ப்பாட்டங்களும் கலகங்களும் பரவின. புரட்சி கொடூரமான முறையில் நசுக்கப்பட்டது.
6. கறுப்பு நூறுகள் (Black Hundreds): 1905ல் ஏற்பட்ட புரட்சியை அடக்கி ஒடுக்க ஜார் அரசனின் போலிஸ் படைகளால் கூட்டப்பட்ட முடியாட்சி ஆதரவுக் கும்பல்களின் பெயர். இவர்கள் புரட்சிவாதிகளைக் கொலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்வது, முற்போக்கான அறிவுஜீவிகளைத் தாக்குவது யூத எதிர்ப்புத் தாக்குதல் நடத்துவது போன்ற எதிர்ப் புரட்சி வன்செயல்களில் ஈடுபட்டனர்.

7. லும்பன்கள் (Lumpen): உற்பத்தித் தொழில் உழைப் பில் ஈடுபடாத பரம ஏழைகளாகிய பிச்சைக்காரர், நாடோடிகள், விபச்சாரிகள் போன்றவர்கள்.

8. அராஜகவாதம் (Anarchism): பாட்டாளி வர்க்க ஆட்சி உட்பட எத்தவிதமான அரசும் கூடாது என்ற நிலையை மேற்கொள்ளும் குட்டி பூர்ஷ்வா சித்தாந்தம் பெரிய ஆலைகள் நிறுவி உற்பத்தியைப் பெருக்குவதற்கெதிராக சின்னஞ்சிறு உற்பத்தியாளர்களின் மூலமே உற்பத்தி செய்ய வேண்டும் என்ற இவர்களின் நிலை சிறு உற் பத்தியாளர்களின் நலன்களைப் பிரதிபலிக்கிறது. அரசி யற் போராட்டத்தை எதிர்ப்பதன் மூலம் பூர்ஷ்வா அர சியலுக்கு தொழிலாள வர்க்கம் அடிமைப்பட்டுக் கிடப் பதற்குத் துணை போகின்றவர்கள்

9. பிளாங்கீயம் (Blanquism): 1805-1881ல் பிரான்சில் வாழ்ந்த கற்பனுவாதக் கம்யூனிசத்தின் தத்துவாசிரியர் பிளாங்க் அவர்களின் சித்தாத்தம். 1830-1848ல் பிரான் சில் நடைபெற்ற புரட்சிகளில் ஈடுபட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டு தம் வாழ்நாளில் பாதி நாட்களைச் சிறை யில் கழித்த இவர் இரகசியச் சதிகள் மூலமாகவே அர சியல் அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என்னும் தவ ருன நடைமுறைக் கொள்கையை முன்வைத்தார்.

10. 'லெட்' பிரதேசம்: தற்காலத்தில் 'லாட்வியா' என்று அழைக்கப்படும் பால்ட்டிக் கடலோரத்தில் உள்ள இப் பகுதி இன்று சோவியத் யூனியனிலுள்ள ஒரு சோஷ லிசக் குடியரசு நாடாக விளங்குகிறது.

11. நவயவ்ரெம்யா (புதிய காலம்): 1968 முதல் 1917 அக் டோபர் வரை பீட்டர்ஸ்பர்க் (இன்றைய லெனின் கிராடு) நகரில் நடத்தப்பட்ட தினசரி. நிலப்பிரபுத்து வத்தையும், அதிகார வர்க்கத்தையும் சேர்ந்த மிகவும் பிற்போக்கான கும்பல்களின் பிரச்சார ஏடாக விளங்கி யது. கறுப்பு நூறுகளை ஆதரித்தது.

12. ருசிய பயங்கரவாதம்: 19ம் நூற்றுண்டு பிற்பகுதி யில் தோன்றிய நரோதனிக் (மக்கள் விருப்பம்) அமைப் பைச் சேர்ந்தவர்கள் மக்களிடம் தொடர்பு இல்லாத தால் தனிநபர் பயங்கரவாதத்தில் இறங்கினர். லெனி னுடைய மூத்த சகோதரரும் இவர்களுடன் செயற்பட் டார். மரண தண்டனை பெற்ருர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''போராட்டம் ஏதாவது ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் தான் இருக்க வேண்டும் என்று அது இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதில்லை; மிகவும் வேறுபட்ட பல போராட்ட வடிவங்களையும் அங்கீகரிக்கின்றது; இவ் வடிவங்களை அது இட்டுக் கட்டுவதில்லை. மாறாக இயக்கம் முன்செல்லும் பொழுது தாமாக புரட்சிகர வர்க்கங்களினால் எந்த எந்த போராட்ட வடிவங்கள் உருவாக்கப்படுகின்றனவோ அவற்றிற்கு ஒரு பொது விதி கண்டு அவற்றை நடத்திச் சென்று, போராட்டங்கள் உணர்வுபூர்வமானவையாக வெளிப்படும்படி செய்கின்றது. வெறும் கருத்தியற் பாங்கான சூத்திரங்களையும் வறட்டுத் தத்துவத்தில் பிறக்கும் யோசனைகளையும் மார்க்சிஸம் எதிர்க்கின்றது.''

**- லெனின்**

**NATIONAL LIBERATION FRONT OF THAMIL EELAM**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்